**லங்கா கனியமணல் கம்பனி - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா கனியமணல் கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாமையால் கணக்காய்வினால் கணிக்கப்பட்டவாறு காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு தொழிற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 691,547,643 தொகையாக காணப்பட்டதுடன் கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல்கூற்றில் அது ரூபா 347,927,208 தொகையாக காணப்பட்டது. அதேபோல் கணக்காய்வினால் கணிக்கப்பட்டவாறு காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 724,600,528 தொகையாக காணப்பட்டதுடன், கம்பனியினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,068,220,961 தொகையாக இருந்தது. | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | நியமத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 51 இன் படி சொத்துக்களின் பயன்தரக் கூடிய ஆயுட்காலம் குறைந்த பட்சம் அனைத்து நிதி ஆண்டுகளிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், எதிர்ப்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளை விட வித்தியாசம் எனின், அந்த வித்தியாசங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் (டுமுயுளு) 8 இன் படி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 486,158,105 தொகை கிரயத்தையுடைய ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து அதன்படி கணக்கீடு செய்திருக்கவில்லை. | கூடிய விரைவில் நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்து சொத்துக்கள் பதிவேடு மற்றும் பராமரிப்புப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் ஏற்பாடுகின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து அதன்படி கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மிகையூதியக் கொடுப்பனவு சரியாக கணிக்கப்படாமையால் ரூபா 2,070,534 தொகையினால் மிகையூதியம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த மிகையாக கணிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு 2022 ஆண்டு கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஒக்தோபர் 13 திகதி ரூபா 67,932,916 தொகை பெறுமதியான 02 வீல் லோடர் இயந்திரங்கள் புல்மோட்டை இயந்திர அறைக்கு கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதனை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 1,698,323 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், சொத்துக்களும் ரூபா 67,932,916 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த இயந்திரம் 2021.10.13 திகதி கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், புசுடீ பத்திரம் வழங்குவதற்கு தாமதமடைந்ததால் 2021 ஆண்டிற்கான சொத்துக்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்காமையால் 2021 ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 1,698,323 இற்கான குறைந்த பெறுமானம் ஒன்றை காட்டுகின்றது என மற்றும் 2022 நிதியாண்டிற்கான சொத்துப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது எனவும். | கொள்வனவுகள் கால ரீதியாக சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஜனவரி 09 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனியினால் ரூபா 500 மில்லியன் தொகையொன்று மட்பாண்ட கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக அரச மூல வளங்கல் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு 2012 ஜனவரி 10 திகதி வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த கடன் தொகைக்காக ரூபா 155,226,434 இற்கான ஐயக்கடன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 517,421,448 தொகைக்கான கடன் தொகை மற்றும் வட்டி மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | திறைசேரியின் அறிவுரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது இந்த ரூபா 500 மில்லியனிற்கான தொகை கணக்குகளில் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் அதன்படி கொழும்பு வாணிப நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பாகவும், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என. | திறைசேரியின் அறிவுரையின் படி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டளவில் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த ரூபா 25,000,000 தொகை மற்றும் ரூபா 5,000,000 ற்கான கடன் தொகைகள் 10 நிதியாண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த கடன்தொகைக்காக காணிப் பகுதியொன்று வழங்குவதற்கு இணங்கியிருந்ததெனவும் மற்றும் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் தொகையை பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சினூடாக திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என. | திறைசேரியின் அறிவுரையின் படி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஜனவரி 27 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 1.2 | அரச நிறுவனம் ஒன்றின் தலைவருக்கு ஒரு வாகனம் மற்றும் மாதாந்தம் 150 லீற்றர் எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணான தலைவரினால் 2021 ஆண்டில் அவருக்குரிய எரிபொருள் கொடுப்பனவை மிகைத்து 8133 | 2021 ஆண்டிற்குரிய மேலதிக எரிபொருளுக்காக பணிப்பாளர் சபையிலிருந்து அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த | சுற்றறிக்கை விதிமுறைகளை மிகைத்து மற்றும் அதற்கு முரணாக செயற்படக்கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லீற்றர் எரிபொருள் பெற்றிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 1,135,748 ஆகும். அதேபோல் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்தில் எரிபொருள் தொட்டியின் கொள்வனவு 80 லீற்றர் காணப்பட்ட போதிலும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த எரிபொருள் பில்பத்திரங்களுடனான உறுதிச் சீட்டுக்களின் மீதான தெரிவுக் கணக்காய்வின் போது அனேகமான பில்பத்திரங்களில் 100 லீற்றர்களை மிகைத்து எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோல், தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்திற்கு மேலதிகமாக வேறு வாகனங்களுக்கும் எரிபொருள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | வாகனம் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளும் போது மற்றும் தூரப் பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்யும் போது சொகுசாகப் பிரயாணம் செய்வதற்காக தலைவரின் ஜீப் வண்டியை பயன்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அந்த தனியார் வாகனத்திற்காக எரிபொருள் வழங்குவது மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், எரிபொருள் தொட்டியின் கொள்ளளவை மிகைத்து டீசல் பெற்றுக்கொண்டது இரவு நேரத்தில் பிரயாணம் செய்வதற்காகவும், புல்மோட்டை போன்ற தூரப் பிரதேசங்களில் சுபர் டீசல் எரிபொருள் நிறப்பு நிலையங்கள் காணப்படாமையாலும், எரிபொருள் தொட்டிக்கு மேலதிகமாக கொள்கலன்களுக்கும் எரிபொருள் தொட்டியின் கொள்ளளவை மிகைத்து சுபர் டீசல் கொள்வனவு செய்யப்படுகின்றது என. | |
| (ஆ) | 2004 மார்ச் 30 திகதிய பீஈ∴. பீடீசீடீ∴.14∴.02 இலக்கம் கொண்ட திறைசேரிச் செயலாளரின் கடிதம். | இந்தக் கடிதத்தின் மூலம் வருகைக் கொடுப்பனவு ரூபா 500 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு முரணாக கம்பனியினால் அவ்வப்போது பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் மீது மீளாய்வாண்டளவில் ரூபா 3,000 தொகை வரை அதிகரித்திருந்தது. வருகைக் கொடுப்பனவு மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகத்திற்காக ரூபா 3,769,600 தொகையும் புல்மோட்டை இயந்திர அறைக்காக ரூபா 17,429,792 தொகையும் என திறைசேரிச் | 2011 ஆண்டில் வரிசை அமைச்சினால் வருகை கொடுப்பனவு ரூபா 2,000 தொகை மற்றும் உணவுக் கொடுப்பனவு ரூபா 150 தொகை என திருத்தம் பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவச சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த பரிந்துரையின் படி செயற்படுத்தப்பட்டுள்ளது. 2020 ஆண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது அவை முறையே ரூபா 3,000 தொகை மற்றும் ரூபா 200 தொகை வரை | திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாளரின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. | அதிகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | 2004 மார்ச் 30 திகதிய சீஈ.ஃ. பீடீசீபீ.ஃ.14.ஃ.02 இலக்கம் கொண்ட திறைசேரிச் செயலாளரின் கடிதம். | இந்த கடிதத்தின் மூலம் ஒரு நாளைக்கு உணவுக் கொடுப்பனவு ரூபா 35 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனியினால் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மீது அவ்வப்போது அதிகரித்து மீளாய்வாண்டளவில் ஒரு நாளைக்கு ரூபா 200 தொகை ஆக்கப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகத்திற்காக ரூபா 2,738,800 தொகையும் புல்மோட்டை இயந்திர அறைக்காக ரூபா 26,773,600 தொகையும் என உணவுக் கொடுப்பனவு முறையான அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்படும் என. | திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | தாபனக் கோவையின் அத்தியாயம் ஓஓஜ பிரிவு 4 | ஏனைய தரங்களை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளின் மற்றும் பாதுகாப்பு ஆடைகளின் தன்மை எண்ணிக்கை மற்றும் அது வழங்கப்பட வேண்டிய காலப்பகுதி தாபன பணிப்பாளர் நாயகத்திடம் வினவி தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் அந்த ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தாமல் ஒவ்வொரு ஆண்டிலும் (2010 ஆண்டளவிலிருந்து) ஏனைய தர உத்தியோகத்தர்கள் (தொழிலாளர், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், பாதுகாப்பாளர், இயந்திர இயக்குனர்கள், இயந்திரம் சுத்தம் செய்வோர் தவிர) இற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது சீருடை வழங்கப்பட்டிருந்தது. 2021 | ஏனைய பதவியணியினருக்கு சீருடை வழங்க வேண்டும் என விண்ணப்பித்த பின்னர் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் சீருடை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானம் கிடைத்திருந்தது. 2021 ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 12.5 மில்லியனிற்கான தொகை வீண் செலவொன்றல்ல. அது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமானவாறு மற்றும் ஊழியர் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவாகும் என. | தாபனக் கோவையின் விதி முறைகளின் படி செயற்பட வேண்டும். |

ஆண்டிற்கான அனைத்து சீருடைகளுக்குமான ரூபா 12,649,118 இற்கான செலவொன்று கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,386,986,319 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 50,797,328 தொகை ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,437,789,647 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆண்டிற்கான இல்மனைட் டென்டரின் மொத்த விற்பனை மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தமை மற்றும் கணக்கீடு செய்தல் இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங் காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 403,419,895 தொகை பெறுமதியான 04 நிலையான வைப்புக்களை முதிர்வடைவதற்கு முன்னர் காசாக்கியிருந்த காரணத்தினால் கிடைக்க இருந்த ரூபா 1,475,582 இற்கான வட்டி வருமானம் ஒன்றினை கம்பனி இழந்திருந்தது. அதேபோல் 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 2,293,478,814 தொகை பெறுமதியான நிலையான வைப்புக்கள் கம்பனியிடம் காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அவை 1,500,001,000 தொகையும் 2022 ஜூன் அளவில் ரூபா 1,300,001,000 தொகையுமாக இருந்தது. அவற்றில் ரூபா 500,000,000 தொகை இறக்குமதிக்காக பிணையாக வைக்கப்பட்டதாகும். | ஜனவரி முதல் நவம்பர் வரை டென்டர் ஏதும் மேற்கொள்ளப்படாமையால் நாளாந்தச் செலவுகளை தீர்த்துக்கொள்வதற்காக நிலையான வைப்புக்கள் பயன்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | நிறுவனத்திற்கு உச்சமட்ட நலன்கள் பெறக்கூடிய விதத்தில் செயற்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியில் வெற்றிடமாக காணப்பட்ட பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கும் வரை பதில் கடமையாற்றுவதற்காக 2020 நவம்பர் 12 திகதி முதல் புவிச் சரிதவியல் அளவைகள் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் ஒருவர் (புவியியலாளர்) நியமனம் செய்யப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தர் ஒரு வாரத்திற்கு 03 நாட்கள் கடமைகளில் இருந்து | புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் சட்ட திட்டங்களின் படி ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் ஏனைய நிறுவனம் ஒன்றில் கடமைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால், அவர் அந்த நிறுவனத்தில் கடமையாற்றும் காலப் பகுதிக்கு உரிய சம விகிதத்தில் செலுத்தியிருந்த தொகையை மீளளிப்பு செய்ய | ஒரே காலப் பகுதிக்காக ஒரு விடயத்திற்காக இரட்டை கொடுப்பனவு மேற்கொள்ளப்படக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிப்பதற்கு புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்க பணியக தலைவரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2020 நவம்பர் மாதம் முதல் 2021 மே மாதம் வரை பொது முகாமையாளர் பதவியில் பதில் கடமை மேற்கொண்ட கடமை நாட்களுக்காக புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கப் பணியத்தின் கோரிக்கையின் படி ரூபா 414,760 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதிக்காக ரூபா 560,032 தொகை கம்பனியினால் பதில் கடமையாற்றுவதற்காக பொது முகாமையாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, பதில் கடமையாற்றியதற்காக பொது முகாமையாளருக்கு ஒரே காலப் பகுதிக்காக இரட்டை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேண்டும். அதன்படி, மீளளிப்பு செய்ய வேண்டிய தொகையினை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை அவர்களுக்கு செலுத்தும் படி எமது நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த தொகையை மீளளிப்பு செய்தல் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இது தவிர பொது முகாமையாளர் எமது நிறுவனத்திலிருந்து அடிப்படை சம்பளத்தில் 25மூ மாதாந்த கொடுப்பனவொன்று பொது முகாமையாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக செலுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | நடைபெறு வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,671,088 தொகைக்கான செலவு 2014 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டுவந்து காணப்பட்டதுடன், அந்த செலவுகளுக்குரிய செயற்திட்டங்கள் செயற்படவில்லை என முகாமையுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது கண்டறியப்பட்டது. அவ்வாறாயினும், விளைவற்ற இந்தச் செலவு நடைபெறு வேலையின் கீழ் மீளாய்வாண்டு இறுதி வரை முன்கொண்டு வந்து காணப்பட்டது. | அப்போது காணப்பட்ட பல்வேறு முகாமைத்துவ தீர்மானங்களின் படி செயற்திட்டங்கள் இடைவெளியில் நிறுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அறிவுரைகள் மற்றும் அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | செலவுகள் விளைவற்றவையாகாமல் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டின் படி இல்மனைட் விற்பனை எண்ணிக்கை 50,000 மெ.தொ. ஆக காணப்பட்டதுடன், இறுதிக் கணக்குகளின் படி உள்ளவாறான விற்பனைகள் எண்ணிக்கை 79,947 மெ.தொ. எனினும், அது 2020 ஒக்தோபர் 28 திகதி 85,000 மெ.தொ. விற்பனை டெண்டருக்குரிய விற்பனையாக காணப்பட்டதுடன் 2021 ஆண்டிற்கான இல்மனைட் விற்பனை நடைபெற்றிருக்கவில்லை.<br>விலைகூறர்தாரருடன் 2020 நவம்பர் 09 திகதி அனுகியிருந்த உடன்படிக்கையின் 5 ஆவது நிபந்தனையின் படி 130 நாட்களுக்குள் தனது இருப்பினை 4 | 85,000 மெ.டொ. இல்மனைட் டெண்டர் 2020 ஒக்தோபர் மாதம் 28 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தின் உயர் மட்ட முகாமைத்துவத்தினால் டெண்டர் தொகையை கொடுப்பனவு செய்வதற்காக மற்றும் இருப்பினை அகற்றிக்கொள்வதற்காக குறிப்பிட்ட காலத்திற்காக கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்துள் அகற்றுவதற்கு முடியாமல் போனதால் அந்த இருப்பினை அகற்றுவதற்கு ரூபா 1,107,992 தொகை ஒன்று தாமதக் | விற்பனைச் செய்முறை, காணப்படும் அதிகார எல்லையுள் திட்டமிட்ட முறையில எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கா நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிகளாக விடுவித்துக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அது 2021 ஆகஸ்ட் 15 திகதி வரை காணப்பட்டமையால், மேலும் மேலதிகமாக 150 நாட்கள் தாமதம் அடைந்திருந்தது. அதேபோல் 12,495,000 அ.டொ.களுக்கான டென்டரின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கொடுப்பனவுகள் மற்றும் இருப்புக்களை அகற்றுவதில் தாமதம் காணப்பட்ட போதிலும் நான்காவது காசுக் கொடுப்பனவு மற்றும் இருப்பினை அகற்றுவதற்காக மாத்திரம் தாமதக் கட்டணமாக ரூபா 1,107,992 தொகை மாத்திரம் கொள்வனவாளரிடம் அறவிடப்பட்டிருந்தது. | கட்டணமாக அறிவிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கனிய மணல் கணிசமாக காணப்படும் கோகிலாய் பிரதேசத்திலிருந்து 2013.02.13 திகதி ரூபா 2.25 மில்லியன் தொகைக்கு 17.69 ஹெக்டயார் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இந்தப் பகுதியில் இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. காணியை உரியமுறையில் உரித்தாக்கி புதிய இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்கு முன்னர் 2013 ஆகஸ்ட் மாதம் இயந்திர அறைக்காக ரூபா 39,339,473 தொகை பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்து அந்த சொத்துக்கள் அனைத்தும் புல்மோட்டை இயந்திர அறையின் வேறு இடங்களில் வைக்கப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டதுடன், சில இயந்திரங்கள் களஞ்சியத்தில் விளைவற்று குவிக்கப்பட்டிருந்தது. கோகிலாய் செயற்திட்டதிற்காக கொள்வனவு செய்து டீடழஉம யு பழைய இயந்திர அறையில் பொறுத்தப்பட்டிருந்த 24 ளுிசையட கழற்றப்பட்டு முற்றவெளியில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ளுிசையட இயற்திரம் கொள்வனவு செய்திருந்த 2013 ஆகஸ்ட் மாதம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், இந்த செயற்திட்டத்திற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள் காணப்பட்ட போதிலும் மற்றும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் 2015 ஜூன் 25 திகதி 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், பின்னர் இயந்திர அறையின் பல்வேறு பகுதிகளுக்கு அவர்கள் | கோகிலாய் புதிய கனிய மணல் இயந்திர அறை நிறுவுவதற்காக 2019 ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2020 கனிய மணல் அகழ்வதற்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. 2022 ஆண்டின் போது செயற்திட்ட முன்மொழிவு தயாரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப் பகுதியுள் அறிக்கை கிடைத்திருக்கவில்லை. உத்தேச இயந்திர அறைக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதி மழை காலங்களில் நீர் நிரம்புவதால் அகழ்வு மேற்கொண்ட கனிய மணலை களஞ்சியப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த அந்தக் காணியில் மண் நிரப்புதல் செயற்திட்ட முன்மொழிவு தயாரிப்பதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மின்மாற்றி பொருத்துவதற்கு முன்னர் இந்தக் காணிப் பகுதிக்குரிய பகுதியும் மண் நிரப்பப்பட்டு மின்மாற்றிக் கட்டிடம் அமைக்கப்பட வேண்டியிருந்தது. கோகிலாய் புதிய செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் 2015 ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த 117 ஊழியர்கள் தற்போது இயந்திர அறையின் பல்வேறு பிரிவுகளில் சேவையில் ஈடுபட்டு தொழில் தேர்ச்சி பெற்றிருந்ததுடன், கோகிலாய் இயந்திர அறை | கோகிலாய் செயற்திட்டம் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன், இயந்திர உபகரணங்களையும் உற்பத்திச் செய்முறைகளில் ஈடுபடுத்தி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இணைக்கப்பட்டிருந்தனர். கோகிலாயில் புதிய இயந்திர அறை நிர்மானிக்கும் குறிக்கோளாவது கனிய மணல் பெற்றுக்கொள்ளல், அதன் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் உற்பத்திக்கு பெறுமதியொன்றினை கூட்டிக் கொள்ளல் ஆக காணப்பட்ட போதிலும், இந்த நிர்மாண வேலைக்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2022 ஜூலை இறுதி அளவிலும் செயற்திட்ட முன்மொழிவு (ீசழதநஉவ சுநிழசவ) தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஜனவரி 01 திகதி கோகிலாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அங்கு மணல் நிறப்பும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும், 2021 திசெம்பர் 31 திகதி அளவில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி செயற்திட்டத்திற்காக ரூபா 17,767,504 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆரம்பித்த பின்னர், குறிப்பிட்ட துறையில் திறனுடைய ஊழியர் குழாமொன்று அங்கு சேவையில் ஈடுபடுத்த முடியுமாகும்.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி ஒன்று 30 வருட குத்தகைக்கு ரூபா 24,220,118 தொகை செலுத்தி கனிய மணல் கம்பனியின் தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2013 ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது. 15,325 சதுர அடிகளைக் கொண்ட 06 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 171,453,486 இற்கு 2018 பெப்ரவரி மாதத்தில் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. 2021 ஜூன் 02 திகதி ஒப்பந்தப் பெறுமதி ரூபா 175,224,359 தொகை என (பெறுமதி கூட்டிய வரி இன்றி) மீண்டும் திருத்தப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.6 இன் பிரகாரம் விலைகூறல்தாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உடனடியாக முறைப்பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதப்பட்டு கையொப்பமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த நிறுவனத்துடன்

புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2018 பெப்ரவரி 27 திகதி ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த போதிலும் அடிக்கடி நடைபெறும் முகாமைத்துவ மாற்றங்களின் மீது கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஏகோபித்த தீர்மானம் ஒன்று காணப்படாமையால் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.
வேலையை பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த 2022 ஜூலை 13 திகதியும் கடந்திருந்த போதிலும், நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணத்தினால் பொது மக்களுக்கு ஏற்பட்டிருந்த தொந்தரவு நிலைமை அதிகரித்தல், பூர்த்தி செய்வதற்கு தேவையான மூலப்பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய காரணங்களினால் தாமதம் ஏற்பட்டிருந்தது.

தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணித்தல் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு சட்டரீதியான கடப்பாடு ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டிருந்தது 2020 பெப்ரவரி 26 திகதியே ஆகும். அதாவது ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு 02 வருடங்கள் கடந்த பின்னர் ஆகும். 30 வருட குத்தகைக் காலத்தில் 2022 ஜூன் இறுதியளவில் 09 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் அங்கு தரையோடுகள் பதித்து உள்ளக வடிவமைப்பு வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பாதீட்டு இல்மனைட், ஹைடை இல்மனைட், ரூடயில் இல்மனைட் மற்றும் ச(ர்)கோன் உற்பத்திகள் முறையே 50000, 6020, 4800 மற்றும் 1800 மெ.தொன்களாக காணப்பட்ட போதிலும் உள்ளவாறான உற்பத்தி 44700, 4368, 1880, 400 மெ.தொன்களாக காணப்பட்டது. அதன்படி, கம்பனிக்கு எதிர்பார்த்த உற்பத்தியை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. அதேபோல், 2020 ஒக்தோபர் மாதம் டெண்டர் மூலம் வழங்கியிருந்த 85,000 மெ.தொன் இல்மனைட் இருப்பு கொள்வனவாளரினால் உரிய முறையில் அகற்றியிருக்காத காரணத்தினால் மற்றும் களஞ்சியங்களின் கொள்ளளவினை மிகைத்திருந்தமையால் 2021 மார்ச் வரை ‘‘டீடழுஉம டீ’’ இயந்திர அறையின் உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக மனித வளம் உட்பட அனைத்து வளங்களும் விளைவற்று காணப்பட்டது. | கம்பனிக்கு ஆண்டின் போது எதிர்பார்த்த பாதீட்டு உற்பத்தி இலக்கினை நெருங்க முடியாமை நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் 2020 ஆண்டு விற்பனை செய்யப்பட்ட 85,000 மெ.தொ இல்மனைட் இருப்பு உரிய முறையில் அகற்றியிருக்காமையின் காரணத்தினால் களஞ்சிய வசதிகள் போதியளவாக காணப்படாமையால் டீடழுஉம டீ இயந்திர அறையின் உற்பத்தி அலுவல்கள் நிறுத்துவதற்கு நேரிட்டிருந்தமை ர்ை வுவையெரைஅஇ சுரவடைந மற்றும் ணுசைஉழெ உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருளான மின்காந்த மணல் கிடைக்கப் பொறாமையாகும். | விற்பனைச் செய்முறை, காணப்படும் அதிகார எல்லையுள் திட்டமிட்ட முறையில எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கா நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது டுழற பசயனந ணுசைஉழெ உசரனநஇ குயைெட வுயடநைெ மற்றும் ர்லனசழ ளணைநன குைநௌ ஆகியவற்றின் மூலம் வருமானம் ஏதும் கிடைத்திருக்காததுடன், மதிப்பீட்டு வருமானத்தை விட கூடுதலாக சுரவடைந 85 | நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தினால் இந்த பாதியளவு உற்பத்தியை தொடர்ந்தும் மீளாக்கம் செய்து அதிலுள்ள கனிய மணலை அகற்றி உற்பத்தி மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் | முன்னோடிச் செயற்திட்டத்தின் கீழ் பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்து உச்சமட்ட போட்டி அடிப்படையின் மூலம் கூடிய விலையொன்று மற்றும் விற்பனையொன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்தினாலும் ணுசைஉழடெ 75 சதவீதத்தினாலும் குறைந்திருந்தது. ஹயிடயி இல்மனைட் 4,368 மெ.தொன் உற்பத்தி செய்திருந்ததுடன், ஆரம்ப மீதி 3,210.51 மெ.தொ. ஆகும். இந்த ஆண்டின் போது ஹயிடயி இல்மனைட் விற்பனை ஏதும் ஏற்பட்டிருக்காமையால் அந்தக் களஞ்சியம் நிரம்பி வழிந்திருந்தமையால் பாதுகாப்பற்ற முறையில் முற்றவெளியிலும் குவிக்கப்பட்டிருந்தது. அதேபோல் மீளாய்வாண்டு ஜனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை கனிய மணல் உற்பத்தியை விற்பனை செய்வதற்காக டென்டர் நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன் டுஆளு.'.ஆமுவு.'.வுனுசு.'.21.'.01 இலக்கம் கொண்ட டென்டருக்காக விலை விசாரணை 2021 ஒக்தோபர் 21 திகதி அதாவது 09 மாதங்களின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காகவும் எதிர்பார்க்கப்பட்டவாறு மொத்த விற்பனை எண்ணிக்கையை பெற்றுக்கொள்வதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | இந்த உற்பத்தியை, விற்பனவிற்காக 2021 ஆண்டில் சமர்ப்பிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் விற்பனைக்காக முறையான செய்முறையொன்று ஆக்கி அவற்றின் மூலம் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு கட்டளை வழங்கப்பட்டது. அந்த முன்னோடி செயற்திட்டம் (ீஐடுழவ ீசுழதுநுஊவு) இன் கீழ் பிரதான உற்பத்திகளின் கணிசமான அளவு எண்ணிக்கை டுஆளு.'.ஆமுவு.'.வுனுசு.'.21.'.01 டென்டரின் கீழ் விற்பனை செய்வதற்கு செயற்பட்டு, அதன் முன்னேற்றத்தினை பார்த்து மேலும் விற்பனை செய்முறையை திருத்தி முன்னோடிச் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2022 ஜுன் 20 திகதி வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | தலைமை அலுவலகம் மற்றும் புல்மோட்டை இயந்திர அறையினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது வழங்குனர்களுக்கு வழங்கியிருந்த முறையே ரூபா 2,924,232 இற்கான மற்றும் ரூபா 1,083,100 இற்கான முற்பணங்கள் 2022 மே 31 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தியை விற்பனை செய்வதற்காக வெற்றிகரமான செய்முறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணம் விரைவாக தீர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சச்சரவுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொவிட் 19 தொற்றுநோய் காணப்பட்டமையால் 2021 ஆண்டின் மூதலாவது 04 மாதங்களுக்காக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த 05 வாகனங்களுக்காக ரூபா 4,172,595 தொகை செலவிடப்பட்டு தலைமை அலுவலகத்தின் | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் பொதுப் போக்குவரத்து உரிய முறையில் நடைபெறாமை மாகாணங்களிடையே பிரயாணத் தடை விதிக்கப்பட்டிருந்தமையால் அனைத்து விடயங்களை | ஒரே கருமத்திற்காக இரட்டை கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடாது. இரட்டை கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த மாதங்களுக்காக ஊழியர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு என ரூபா 2,626,500 தொகை வழங்கப்பட்டிருந்தது. புல்மோட்டை இயந்திர அறை ஊழியர்களுக்கு நிறுவனத்தின் வாகனங்களின் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு போக்குவரத்து கொடுப்பனவு என ரூபா 15,379,520 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ஒரே விடயத்திற்காக இரட்டை கொடுப்பனவு ஒன்று நடைபெற்றிருந்தது. | நிறைவேற்றிக்கொள்வதற்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டு போக்குவரத்து வசதிகளை வழங்கி அனைத்து பதவியணியினரையும் சேவைக்கு அழைப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு ஊழியர்களை சேவைக்கு அழைத்த சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட்ட போக்குவரத்துப் படியில் சுமார் 30மூ பதிவழிப்பதற்காக நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஆ) | கொவிட் 19 தொற்றுநோய் காலத்தில் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்ட நிறுவனத்தில் பணிப்பாளர் என கடமையாற்றுபவர் கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவராக இருப்பவரே ஆவார். அத்துடன் வாகனங்கள் பெற்றுக்கொள்ளும் போது பெறுகை செய்முறை கடைபிடிக்கப்பட்டிருந்த போதிலும், விலைகூறல்தாரர் தெரிவு செய்யும் போது மற்றும் கம்பனியினால் ரூபா 4,172,595 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளும் போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்ற கூறுவிலைகள் இடையே யு.ஏ.ஆ. யுஅயசயளைபொந நிறுவனத்தில் இருந்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நிறுவனம் னு.ளு. புரயெளநமயசய கம்பனியிலிருந்து வாகனங்கள் பெற்றுக்கொண்டிருந்தது. இவ்வாறு னு.ளு. புரயெளநமயசய கம்பனியினால் வாகனங்களை பெற்று எமது நிறுவனத்தின் ஊழியர்களை போக்குவரத்து செய்தல் எமது நிறுவனத்தின் கட்டுப்பட்டிற்கு புறம்பான நடைபெற்றிருந்த செயற்பாடொன்றாகும். | மோதல்களுக்கு இடையே கடப்பாடுகளுக்கு வழிவகுக்கும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளக்கூடாது. |
| (இ) | 2020 பெப்ரவரி 03 திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் சாரதி ஒருவர் மற்றும் 2021 நவம்பர் 15 திகதி முதல் மேலும் ஒரு சாரதி என ஒரே தடவையில் இரண்டு சாரதிகள் தலைவருக்கு ஒதுக்கப்பட்டு வாகனத்தின் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தனர். இந்த இரண்டு சாரதிகளினதும் மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பரிசோதனை செய்த போது இரண்டு சாரதிகளும் ஒரே நேரத்தில் மேலதிக நேர கொடுப்பனவு பெற்றிருந்ததுடன், அனேகமான சந்தர்ப்பங்களில் | தலைவர் கொழும்புப் பிரதேசத்திலிருந்து கடமை அலுவல்களுக்காக தூரப் பிரதேசத்திற்கு இரவு பகல் செல்வதனால் மற்றும் ஒரு சாரதி விடுமுறை பெற்றிருக்கும் போது மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய மேலதிகநேர கொடுப்பனவு வரையறையை மிகைத்துச் செல்லும் போது இரண்டு சாரதிகளின் சேவையை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. குறிப்பிட்ட உள் வருதல் வெளிச் செல்லல் தொடர்பாக தலைவரினால் உள் வரவு | முறைகேடான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளக் கூடாததுடன் முறைசாரா கொடுப்பனவுகள் மேற்கொள்ளக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | நல்லிரவு தாண்டும் வரை புல்மோட்டை இயந்திர அறைக்கு செல்வதற்காக மேலதிக நேர படிகள் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், புல்மோட்டை இயந்திர அறையின் வானங்கள் உள்வருதல் வெளிச்செல்லல் அறிக்கையை பரிசோதனை செய்த போது அந்தத் தலைவர் அந்த நாட்களில் புல்மோட்டை இயந்திர அறைக்கு சமுகமளித்ததற்கான சான்றுகள் காணப்படவில்லை. அவர்கள் இருவரும் கம்பனியின் விரல் அடையால இயந்திரத்தில் தமது வருகை மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்திருக்காததுடன், தலைவரினால் அவர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சம்பளங்கள், படி மற்றும் மேலதிக நேரங்கள் என இந்த ஒப்பந்த அடிப்படை சாரதிக்கு மற்றும் ஏனைய சாரதிக்கு முறையே ரூபா 1,250,986 மற்றும் ரூபா 1,726,712 செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் வெளிச் செல்லல் சான்றுபடுத்தப்படுவதுடன், மேலதிக நேர கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது. தலைவர் இயந்திர அறைக்கு வரும் போது மற்றும் வெளிச் செல்லும் போது அனேக சந்தர்ப்பங்களில் பிரதான நுழைவாயிலில் பதிவு செய்யப்படாததுடன், உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் சம்பவக் குறிப்பேட்டில் பதியப்படுகின்றது. அதேபோல் கோகிலாய் வேலைத்தளம், யான்ஓய வேலைத்தளம் மற்றும் கொட்பே வேலைத்தளம் ஆகிய இடங்களுக்கு ஐநுயு மற்றும் நுஜயு கூட்டங்களுக்காக (திருகோணமலையைச் அண்டிய) பங்குபற்றுவதுடன், புல்மோட்டை இயந்திர அறைக்கு செல்லாமல் மீண்டும் கொழும்புக்கு திரும்பி செல்லல் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஈ) | அரச தொழில் முயற்சிகளின் தலைவர் ஒருவருக்கு தனக்கு தனிப்பட்ட வகையில் உத்தியோகத்தர் பெற்றுக்கொள்ளும் உரிமை காணப்படவில்லை எனினும், தலைவர் அவரின் தனிப்பட்ட பாதுகாப்பாளர் என கம்பனி ஊழியர்கள் இருவர் இணைக்கப்பட்டிருந்தனர். இந்த இரண்டு ஊழியர்களும் கம்பனியின் விரல் அடையாள இயந்திரத்தில் உள்வரவு மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்யாததுடன், உள் வரவு மற்றும் வெளிச் செல்லும் அறிக்கை தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த ஊழியர்கள் இருவருக்கும் சம்பளம், படி மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக கம்பனியினால் ரூபா 1,766,704 தொகை செலவிடப்பட்டிருந்தது. | தலைவரின் கோரிக்கையின் படி தனிப்பட்ட பாதுகாப்பாளராக தலைமை அலுவலகத்தின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பாதுகாப்பு வழிகாட்டி ஒருவர் மற்றும் இயந்திர அறைக்கு பாதுகாப்பு வழிகாட்டி ஒருவரும் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போது குறிப்பிட்ட பாதுகாப்பு வழிகாட்டிகல் இருவரும் தலைமை அலுவலகம் மற்றும் புல்மோட்டை இயந்திர அறையின் சேவைக்காக அழைக்கப்பட்டுள்ளது என அறிவிககின்றேன். | முறைகேடான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளக் கூடாததுடன் முறைசாரா கொடுப்பனவுகள் மேற்கொள்ளக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2021 செப்தம்பர் 28 திகதி முதல் ஒரு வருட காலப்பகுதிக்காக கம்பனியில் தற்போது பதில் கடமையாற்றும் பொது முகாமையாளர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அந்தப் பதவிக்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட சம்பள அடிப்படையின் ஆரம்ப சம்பள நிலைக்கு சமமான மாதாந்த கொடுப்பனவொன்றும் மற்றும் அந்தப் பதவிக்குரிய ஏனைய சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. அதேபோல், கம்பனியின் கடமை அலுவல்களுக்காக வீட்டிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு வருவதற்கும் செல்வதற்கும் மற்றும் நிறுவனத்தின் ஏனைய கடமைகளுக்காகவும் மற்றும் புல்மோட்டை இயந்திர அறை அலுவல்களுக்காக வருவதற்கும் செல்வதற்கும் எரிபொருளுடன் வாகனம் ஒன்று மற்றும் சாரதியொன்று பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கும் போது கடமை அலுவல்களுக்காக புல்மோட்டை இயந்திர அறைக்கு செல்வதற்கும் வருவதற்கும் நாளொன்றிற்கு ரூபா 12,000 வீதம் ஒரு மாதத்திற்கு 10 நாட்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இது அமைச்சரவை நியமனம் ஒன்றாக காணப்பட்டமையால் அந்த நியமனத்திற்காக கொடுப்பனவை மிகைத்து பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது கொடுப்பனவு மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் 2021 ஒக்தோபர் முதல் 2022 பெப்ரவரி வரை புல்மோட்டை செல்வதற்கு மற்றும் வருவதற்குமாக ரூபா 12,000 வீதம் ரூபா 444,000 தொகை பொது முகாமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய 02 மாதங்களில் இயந்திர அறைக்கு உள் வந்ததற்கு அல்லது வெளிச் சென்றதற்கான | அனைத்து வார இறுதி நாட்களிலும் புல்மோட்டை இயந்திர அறை அலுவல்களுக்கு மேலதிகமாக கனிய மணல் ஆய்வு இடங்கள் மற்றும் புல்மோட்டையை சுற்றி ஆய்வுப் பிரதேசங்கள் போலவே பொது முகாமையாளரினால் நிறுவனத்திற்கு புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள பல அகழ்வு இடங்களை மேற்பார்வை செய்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. வார இறுதி நாட்களில் புல்மோட்டை செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாமையினால் அவருடைய 36 வருடங்களை மிகைத்த விஷேடத்துவ அறிவு மற்றும் மேலதிக சேவைகளை கவனத்தில் எடுத்து புல்மோட்டை பிரதேசங்களுக்கு செல்வதற்காக மாதாந்தம் உச்சமட்ட 10 நாட்கள் விஷேட கொடுப்பனவு ஒன்று செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2022 ஏப்ரல் மாதம் திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி இந்தக் கொடுப்பனவை 2022 ஏப்ரல் மாதம் முதல் (ஏப்ரல் மாதம் உட்பட) பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார். | அமைச்சரவை தீர்மானங்களுக்கு முரணாக செயற்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | நுழைவாயில் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்காத போதிலும், 11 நாட்களுக்காகவும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

**3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உற்பத்தி அலுவல்களை அபிவிருத்தி செய்வதற்காக அவசர மற்றும் அத்தியவசிய கொள்வனவு ஒன்றென கவனம் செலுத்தி ஈர மணல் இயந்திர அறைக்கு புதிய ர்லனசழணளைநச இயந்திரம் 2016 ஜனவரி மாதம் ரூபா 15,426,302 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டு 05 வருடங்கள் கழிந்திருந்த போதிலும், இந்த இயந்திரத்தை உற்பத்தி நடவடிக்கைக்கு ஈடுபடுத்துவதற்கு 2022 ஆகஸ்ட் இறுதியளவிலும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி இந்த இயந்திரம் அவசர தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று அல்ல என தெளிவாகிய போதிலும் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக கம்பனி செயற்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டின் போது புதிய ர்லனசழணளைநச இயந்திரம் ஊழஅஅளைழெ செய்த பின்னர் உற்பத்தி அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட போதிலும், மின்சார முறைமையில் ஏற்பட்ட அவசர துண்டிப்பு காரணத்தினால் அந்த மின்சார சுற்றிற்கு ஏற்பட்டிருந்த சேதத்தின் காரணமாக அதற்குரிய உதிரிப் பாகங்களின் கூறுவிலைகள் எங்களுக்கு கிடைத்திருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் காணப்பட்ட வெளிநாட்டு செலாவணி பற்றாக்குறை காரணமாக இந்த உதிரிப் பாகத்தை நாட்டிற்கு கொண்டு வருவதில் சற்று தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்த உதிரிப் பாகங்கள் கிடைத்தவுடன் இயந்திரங்களை மீண்டும் உரிய நிலைமைக்கு ஆக்கி உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இயந்திரத்தை உற்பத்தி அலுவல்களுக்காக பயன்படுத்த வேண்டியதுடன், இது தொடர்பாக பொறுப்புச் செல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | எரிபொருள் செலவினை 50 சதவீதத்தினால் சேமிக்கும் நோக்கத்துடன் ரூபா 62,370,234 தொகை பெறுமதியான டிரயர் இயந்திரம் ஒன்று 2016 ஜுன் 30 திகதி இறக்குமதி செய்து அதற்காக ரூபா 1,164,350 இற்கான தாமதக் கட்டணம் உட்பட ரூபா 43,838,767 தொகை 2021 திசெம்பர் 31 திகதி வரை வருடாந்த நிதிக் கூற்றுக்களின் கீழ் முற்பணங்களின் | இந்த இயந்திரத்தை செயற்படுத்துவதற்கான இரகசிய இலக்கத்தை (ியளளறழசன) மீண்டும் உருவாக்கி 2022 மார்ச் மாதம் அளவில் இயந்திரம் மீண்டும் செயற்படுத்தியிருந்தது. எதிர்பார்த்த செயற்பாட்டு நிலைமைக்கு ஆக்குவதற்காக இயந்திரம் தொடர்ச்சியாக பரிசோதனை செய்த போதிலும் | இயந்திரத்தை செயற்படு நிலைமைக்கு மற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் காட்டப்பட்டிருந்தது. இந்த கொள்வனவு 06 வருடங்களை கடந்திருந்த போதிலும், இந்த இயந்திரத்தை செயற்படு நிலைக்கு மாற்றி உற்பத்தி அலுவல்களுக்கு பயன்படுத்துவதற்கு இந்த அறிக்கை திகதி வரை கம்பனிக்கு இயலாதிருந்த போதிலும், அது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனம் செயற்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் சிக்கல் சுமூக நிலையை அடைந்த பின்னர் இயந்திரத்தை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | |
| (இ) | புல்மோட்டை இயந்திர அறைக்காக நீண்ட காலத்திற்கு முன்னர் கொட்பே இற்காக கொள்வனவு செய்திருந்த நைலோன் கயிறு ரோல் இருப்பொன்று மற்றும் ரூடெயில் ஒரு டொன் பொதி செய்யக்கூடிய பொலிசெக் ஜம்போ உரை பாரிய இருப்பொன்று பயன்படுத்தப்படாமையால் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த பொலிசெக் உரைகள் 11 மற்றும் 16 வருட காலம் முதல் களஞ்சியத்தில் காணப்பட்ட போதும், மீளாய்வாண்டளவில் அவை பயன்படுத்த முடியாத நிலையை அடைந்திருந்தது. வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்தப்பட்டிருந்த போதிலும், இந்த உறை இருப்பினை அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனி செயற்பட்டிருக்காததுடன் களஞ்சியத்தின் இட வசதிகளும் முடக்கப்பட்டிருந்தது. | இந்த பொதிகளை பயன்படுத்துவதற்கு முடியாமையால் அடுத்த இருப்பு கணிப்பீட்டின் போது அகற்றுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. ரூபா 256,764 தொகைக்கான நைலோன் கயிறுகள் கோகிலாய் இயந்திர அறையின் நிறுவும் அலுவல்களின் போது மற்றும் பாரமான இயந்திரங்களை செயற்படுத்தும் அலுவல்களின் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்புடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | அப்புறப்படுத்தும் அலுவல்கள் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பல வருட காலமாக அப்புறப்படுத்தப்பட்ட சிதைவடைந்த இரும்பு, மண் வெட்டும் இயந்திரங்கள், டேலர், லொறி, வாகன என்ஜின்கள், ஸ்பைலர், டிரக்டர், வேன், 05 துஊடீ கள் மற்றும் ஏனைய இயந்திர பகுதிகள் இயந்திர அறை வளாகத்தில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டது. அவற்றை அப்புறப்படுத்துவதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சிதைவடைந்த இரும்பு, வாகனங்கள் மற்றும் ஏனைய இயந்திரப் பகுதிகளை அப்புறப்படுத்துவதற்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் அரச கேள்வி நடவடிக்கை முறையின் மூலம் அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | அப்புறப்படுத்தும் அலுவல்கள் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 04 வருடங்கள் முதல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு திருத்த வேலைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 04 வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது. | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | புல்மோட்டை இயந்திர அறைக்குரிய 5 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டுள்ள 06 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியினால் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களை விற்பனை செய்வதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன், கேள்விகள் சமர்ப்பித்திருந்த ஆட்கள் அந்த பண்டங்களை கொள்வனவு செய்திருக்கவில்லை. | சுற்றுநிருப விதிமுறைகளின் படி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த சுனாமி பேரழிவினால் புல்மோட்டை படகுக்களம் அழிவடைந்த பின்னர் கொட்வே படகுக் களமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவற்றில் காணப்பட்ட இலுவைப் படகுகள் மற்றும் படகுகள் பயன்படுத்தப்படாமல் 16 வருடங்களை விட மிகையான காலம் இந்த சொத்துக்கள் விளைவற்று உக்கிய நிலையில் காணப்பட்ட போதிலும் இந்த சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்காக 2021 ஆண்டில் டென்டர் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2022 ஆண்டின் போது கொட்பே படகுக் களத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த இலுவைப் படகை பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்து கேள்வி அழைக்கப்பட்டு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அலுவல்கள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. அதன் பாதுகாப்பிற்காக 04 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2021 ஆண்டின் போது அவர்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் செலவு என ரூபா 3,798,988 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இதுவரை இந்த ஒரு படகு முழுமையாக வெட்டி அகற்றப்பட்டிருந்ததுடன், ஏனைய படகுகள் மற்றும் இலுவைப் படகுகள் அகற்றுவதற்காக அந்த கொள்வனவாளர்களினால் நாட்டில் காணப்படும் டீ வாயு மற்றும் டீசல் தட்டுப்பாடு காரணமாக அப்புறப்படுத்தும் காலத்தை நீடிக்கும் படி கோறப்பட்டமையால் 2022.09.02 திகதி வரை பணிப்பாளர் சபையினால் அப்புறப்படுத்தும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | அப்புறப்படுத்தும் கருமங்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1997 செம்தம்பர் 09 திகதி இல்மனைட் 27,235 மெ.தொ. அளவு ஏற்றப்பட்டிருந்த போது தீவிரவாதிகளின் தாக்குதலின் மூலம் எம்.வீ. கொடியலிட் கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. இந்தக் கப்பலின் மொத்தப் பாரம் 7,763 மெ.டொ. ஆக காணப்பட்டதுடன், நிறுவனத்தின் அறிக்கைகளின் படி ஆஷா லங்கா நிறுவனத்தினால் இதுவரை அப்புறப்படுத்தியிருந்த இரும்பின் எண்ணிக்கை 3,120 மெ.தொ. ஆகும். 2005 ஆண்டு முதல் இதுவரை 17 வருடங்கள் கடந்துள்ளதுடன், இரு தரப்பினராலும் கையொப்பமிடப்பட்டிருந்த 2021.08.27 திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி கம்பனி வளாகத்தின் 08 வருடங்களாக குவிக்கப்பட்டிருந்த மணலில் 14,202 மெ.தொ. மணல் அகற்றப்பட்டிருந்ததுடன், ஆஷா லங்கா நிறுவனம் கப்பலின் மீதிப் பகுதியை 2022.10.30 திகதிக்கு முன்னர் அகற்றிக்கொள்ள வேண்டி இருந்தது. உடன்படிக்கையின் படி ஆஷா லங்கா நிறுவனத்தினால் கப்பலை அகற்றிக்கொள்ளாமையால் சுற்றாடல் சேதம் போலவே புல்மோட்டை திறந்த துறைமுகத்தின் அலுவல்களும் ஸ்தம்பித்திருந்தமையால் நிதிசார் நட்டமொன்றும் ஏற்பட்டிருந்தது. | இல்மனைட் இருப்பின் உரிமை ஆஷா லங்கா நிறுவனத்திற்குரியதுடன், இதுவரை பாரிய பகுதியொன்று அகற்றப்பட்டிருந்தது. ஆஷா லங்கா நிறுவனம் இந்தக் கப்பலை அப்புறப்படுத்துவதற்காக நீண்ட காலமாக முடியாமல் இருந்தமையால் புல்மோட்டை திறந்த துறைமுகத்திலிருந்து கனிய மணல் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்காக மீண்டும் ஆரம்பிக்க முடியாமையும் ஒரு காரணமாகும். அதேபோல் இந்தக் கப்பலை அகற்றிய பின்னரும் புல்மோட்டை திறந்த துறைமுகத்தின் மூலம் கனிய மணல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியாது. அதற்கான காரணம் புல்மோட்டை இறங்குதளம் சுனாமியினால் முழுமையாக சேதமடைந்திருந்தது. | கப்பலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒட்டுமொத்த நிறுவனத்தின் உற்பத்தி, நிர்வாகம், கணக்குகள் மற்றும் ஏனைய கருமங்கள் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக 2015 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படும் பொது முகாமையாளர் பதவியை நிரந்தரமாக நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் அப்பதவிகளுக்காக இரண்டாம் நிலை அடிப்படை அல்லது ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு தேவையான அலுவலகள் மேற்கொள்ளப்பட்டிருந்துடன், விண்ணப்பங்கள் அழைப்பதற்காக 2022.08.07 திகதி பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. | பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர் விரைவாக சேர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவியாகிய பிரதான இரசாயனவியலாளர் பதவி 11 வருடங்களாகவும், மருத்துவ | குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிரந்தர அடிப்படை உத்தியோகத்தர் சேர்ப்பதற்கு | பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் விரைவாக சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் பதவி 06 வருடங்களாகவும், சிரேஷ்ட பொது முகாமையாளர் (நிதி) மற்றும் சிரேஷ்ட பொது முகாமையாளர் (மனித வளங்கள்) ஆகிய பதவிகள் 2019 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. குறிப்பிட்ட பதவிகளுக்காக இது வரை நிரந்தர உத்தியோகத்தர்கள் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | எதிர்பார்க்கின்றேன். | |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத புல்மோட்டை இயந்திர அறையில் புவியியலாளர் பதவிக்காக 2021 ஜனவரி 01 திகதி முதல் ஜூன் 30 திகதி வரை 06 மாத காலப் பகுதிக்காக ரூபா 92,475 இற்கான மாதாந்த கொடுப்பனவிற்காக ஒப்பந்த அடிப்படையில் தலைவரினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அவருக்கு ரூபா 94,375 விடுமுறை நாள் கொடுப்பனவும் உட்பட 2021 ஜனவரி முதல் நவம்பர் வரை ரூபா 1,008,604 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 02 புவியியலாளர் பதவிகளை ஏற்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுத் தருமாறு அவ்வப்போது வரிசை அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைக்கு புறம்பாக செயற்படக் கூடாது. |
| (ஈ) | அரச தொழில் முயற்சியொன்றின் தலைவர் ஒருவருக்கு தனிப்பட்ட வகையில் சட்ட ஆலோசகர் ஒருவரை பெற்றுக்கொள்ளக் கூடிய உரிமை காணப்படாத போதிலும், கம்பனியின் சட்ட உத்தியோகத்தர் காணப்பட்ட போதிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது சட்ட ஆலோசகர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட பெண் உத்தியோகத்தருக்கு 2020 திசெம்பர் முதல் 2021 ஒக்தோபர் வரை மாதாந்தம் ரூபா 75,000 வீதம் ரூபா 750,000 செலுத்தப்பட்டிருந்தது. அந்த பெண் சட்ட ஆலோசகர் விரல் அடையாள இயந்திரத்தில் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்திருக்காததுடன், அவர் கம்பனியில் கடமையாற்றிதற்கான சான்றுகளும் கணக்காய்வினால் கண்டறியப்படவில்லை. | அமைச்சரினால் தலைவருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைச்சரவை தீர்மானத்தின் படி தலைவரின் சட்ட ஆலோசகர் என 2021.01.01 முதல் நியமனம் செய்யப்பட்டிருந்தது. 2021.01.01 திகதி இந்த நியமனம் தொடர்பாக 2021.07.01 திகதிய கடிதத்தின் மூலம் கைத்தொழல் அமைச்சிற்கு அறிந்து கொள்வதற்காக மற்றும் தேவையான அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2021.09.30 திகதி முதல் இந்த சட்ட ஆலோசகரின் ஒப்பந்த காலம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | முறைசாரா நியமனங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1997 திசெம்பர் 02 திகதி முதல் நிர்வாக உத்தியோகத்தர் பதவியை மேற்கொண்டிருந்த போது ஒழுக்காற்று விசாரணையின் படி 11 குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு 2017 செப்தம்பர் 15 திகதி முதல் கம்பனியின் சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தர பதவிக்கு நியமனம் செய்யாமல் தலைவரினால், கம்பனியின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள) பதவிக்காக 2020 ஏப்ரல் 01 திகதி முதல் ரூபா 120,000 இற்கான மாதாந்தக் கொடுப்பனவிற்கும் 2020 அக்தோபர் 12 முதல் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி புல்மோட்டை இயந்திர அறையின் பிரதிப் பொது முகாமையாளர் (ர்ஆஜ - 3) பதவியில் பதில் கடமை ஆற்றுவதற்கும் நியமனம் செய்யப்பட்டிருந்தார். குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு 2020 ஏப்ரல் முதல் 2022 மார்ச் வரை படியாக ரூபா 3,081,930 தொகை கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. இந்த முறையற்ற நியமனத்தை சரி செய்வதற்கு மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு கம்பனியைப் போலவே அமைச்சும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>மேலும் குறிப்பிட்ட உத்தியோகத்தர் தலைவரினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி 2022 ஏப்ரல் 25 திகதி முதல் பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) நிரந்தரப் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டு இருந்தார். | ஆளுளை சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2020.04.01 முதல் 2020.08.30 வரை பதில் கடமை பிரதி பொது முகாமையார் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) என நியமனம் செய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படாமையால் 2020.08.30 திகதி முதல் அந்த நியமனம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் அவ் உத்தியோகத்தரினால் இழந்த தொழிலை மீண்டும் பெற்றுத் தருமாறு வேண்டிய கோரிக்கையின் படி பணிப்பாளர் சபையினால் வழங்கியிருந்த தீர்மானத்தின் பிரகாரம் பதில் கடமை பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) என 2020.10.12 திகதி மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டு இருந்ததுடன், மீண்டும் பதவியை நிரந்தரப்படுத்தி தருமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி 2022.04.25 திகதி நிரந்தரப் பதவியில் அமர்த்தியிருந்த போதிலும் இந்த உத்தியோகத்தர் வேறொரு உத்தியோகத்தர் ஒருவருடன் சச்சரவு ஒன்று ஏற்படுத்தியிருந்தமையால் இயந்திர அறை ஊழியர்களினால் ஏற்படுத்திய ஆர்பாட்டம் காரணமாக தற்போது அந்த உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | முறைகேடான நியமனங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு 26 செயற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது அவற்றில் 09 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காத தலைவரின் பங்களா என யான்ஓயா கட்டிடம் ஒன்றின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக மற்றும் புல்மோட்டை 12 பதவியணி உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்காக முறையே ரூபா 7,686,638 தொகை மற்றும் ரூபா 1,871,862 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையில் இருந்து குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஊழியர்களின் குடும்பங்களுக்கு மற்றும் நிறுவனத்துக்கு சேவைகள் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு பணம் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் சேவை வசதிகள் வழங்கும் எதிர்பார்ப்புடன் இந்த பழைய சிதைவடைந்த ஊழியர் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 12 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும் சிவில் பொறியியலாளர் பிரிவினால் பொதுவான திருத்த வேலைகள் என மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இலக்குகளை நெருங்குவதற்கு வேண்டியிருந்ததுடன், ஆண்டின் போது மேற்கொள்ளும் மேலதிக விடயங்கள் திருத்திய திட்டத்திற்கு உட்படுத்த வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் ரூபா 3,848,879,000 தொகையும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் ரூபா 24,000,000 தொகையுமாக காணப்பட்ட போதிலும் கம்பனி பெற்றிருந்த உள்ளவாறான வருமானம் முறையே ரூபா 2,720,198,304 தொகை மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் ரூபா 1,107,992 தொகையாகக் காணப்பட்டது. அதாவது மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு பாதிடப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் மாத்திரமே நெருங்கக் கூடியதாக இருந்தது. கம்பனியின் பாதீட்டு செலவு ரூபா 763,855,000 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான செலவு ரூபா 840,332,629 தொகையாக இருந்தது. அது பாதீட்டு செலவை விட ரூபா 76,477,629 தொகையினால் அதாவது 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | ரூடைல், சர்கோன் மற்றும் ஹய் டய் இல்மனைட் எதிர்பார்த்த இலக்கினை சந்தைப்படுத்த முடியாமல் இருத்தல், கொரோனா நிலைமையில் காரணமாக இயந்திர அறை உற்பத்தி ஆண்டு பூராகவும் மெச்சக் கூடிய முறையில் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. எதிர்காலத்தில் வருமானம், செலவு இறுதிக் கணக்குகள் மற்றும் பாதீட்டுக்கு நேரொப்ப தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டு வருமானம் செலவுகளுக்குள் அலுவல்கள் பேணிச் செல்வதற்கு செயற்பட வேண்டும். |